<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**<u>OS.No.88/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. பன்னீர்செல்வம் | வா.சா | : 2 |
| த/பெயர் | : அர்த்தனாரி | தேதி | : 22.07.2026 |

வா.சாட்சி 2–ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.கோ.ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:–</u>**

1. இன்றைய தினம் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததா அல்லது யார் கூறி வந்தீர்கள் என்றால், சேகர் கூறியதன் பெயரில் வந்தேன். சேகர் என்ன கூறி சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால், ஏற்கனவே நிலத்து சம்பந்தமாக கையொப்பம் செய்து இருப்பதால் சாட்சியம் அளிக்க வருமாறு கூறினார். எந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்று தெரியுமா? என்றால், தெரியும். கிரைய பத்திரத்தில் கையொப்பம் செய்தேனா? என்றால், அக்ரீமெண்ட் பத்திரத்தில் கையொப்பம் செய்தேன். மேற்படி பத்திரம் வாங்கியதில் இருந்து தயார் செய்ததில் இருந்து யார், யார் கையொப்பம் செய்தார்கள் என்ற அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் என்றால், சரிதான். நான் கையொப்பம் செய்ததாக கூறப்படும் பத்திரம் எங்கு வாங்கப்பட்டது என்றால், திருச்செங்கோட்டில் வாங்கப்பட்டது. வெங்கடாசலம் என்கிற வழக்கறிஞர் கூற கூற வெங்கடேசன் என்கிற தட்டச்சர் தட்டச்சு செய்தார்.

2. பத்திரத்தினை அன்றைய தினம் சென்று வாங்கி வந்தாரா? என்றால், அன்றைய தினம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது, ஆனால் திருச்செங்கோட்டில் வாங்கியதாக கூறினார். நான் கையொப்பம் செய்த தேதி எனக்கு ஞாபகத்தில் உள்ளதா? என்றால், 14.07.2021ம் தேதியன்று கையொப்பம் செய்தேன். பத்திரத்தினை அன்றைய தினம் தான் வாங்கி வந்து பிரிண்ட் எடுத்தார்கள் என்றால், பத்திரத்தை ஏற்கனவே வாங்கி வந்ததாக கூறினார்கள். மேற்படி பத்திரத்தினை யார் வாங்கினார்கள் என்றும், யார் பெயரில் வழங்கப்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். பத்திரம் பாகம்பட்ட தினத்தன்று சேகரும், அவருடைய மனைவியும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒரு விசாரணைக்கு ஆஜராகிவிட்டு வந்தது குறித்து என்னிடம் கூறினார்களா? என்றால், கூறவில்லை.

3. தாவா சொத்து சம்பந்தமாக சேகர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் விசாரணைக்கு சென்று வந்த விபரத்தை என்னிடமோ மற்றொரு சாட்சியிடமோ அல்லது பத்திர எழுத்தரிடமோ கூறியதை அன்றைய தினம் கேட்டேனா? என்றால், கேட்கவில்லை. இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்தபொழுதாவது எஸ்பி ஆபிஸ்சுக்கு விசாரணைக்கு சென்று வந்தோம் என்றும் அந்த பத்திரம் சம்பந்தமாக தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று என்னிடம் கூறினாரா? என்றால், கூறினார். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சேகரனுடைய மனைவியிடம் ஏற்கனவே ஒருத்தரிடம் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் நிலுவையில் இருக்கும்பொழுது நீங்கள் ஏதாவது கிரைய ஒப்பந்தம் வைத்துள்ளீர்களா என்று கேட்டதாக என்னிடம் கூறினார்களா? என்றால், கூறவில்லை.

4. கிரைய ஒப்பந்த பத்திரம் எதுவும் இல்லை என்று மேற்படி விசாரணையில் சேகர் கூறிவிட்டு வந்தேன் என்றாவது என்னிடம் கூறினாரா? என்றால், என்னிடம் அது குறித்து எதுவும் கூறவில்லை. நான் கையொப்பம் செய்துள்ள கிரைய ஒப்பந்த பத்திரம் குறித்த தாவா சொத்தானது எங்கு உள்ளது என்றால், மோளிப்பள்ளியில் உள்ளது. தாவாசொத்தில் என்னுடைய மனைவி பெயரில் பிளாட் எண். இரண்டினை வாங்கியுள்ளேன் என்றால், சரிதான். என் மனைவி பெயரில் வாங்கப்பட்டுள்ள பிளாட்டின் சதுர அடி 2440 ஆகும். மேற்படி சொத்தினை நான் 2022 இல் Repco பைனான்சில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளேன் என்றால், சரிதான். 24 லட்சம் கடன் பெற்றேனா? என்றால், ஆமாம். மேற்படி நிறுவனத்தில் 24 லட்சத்தை பெற்று மேற்படி நிலத்தை வாங்கியுள்ளேன் என்றால், சரிதான். எனக்கு சொந்த வீடு உள்ளது அதற்குரிய பத்திரத்தையும் கொடுத்து தான் மேற்படி கடனை பெற்றேன்.

5. நான் வாங்கிய மேற்படி பிளாட் தற்பொழுது எவ்வளவு ரூபாய்க்கு போகும் என்றால், சதுர அடி ரூ.200/—க்கு போகும். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மனையை மட்டும் தான் வைத்து கடன் பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல மேற்படி வீட்டினுடைய பத்திரமும் மேற்படி வங்கியில் தான் அடமானத்தில் உள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்தபொழுது சாட்சி கையொப்பம் செய்த நான் மற்றொரு சாட்சியான வெங்கடேசன் மற்றும் தட்டச்சு செய்தவர் ஆகியோரை தவிர்த்து வேறு யாரும் அங்கு இல்லையா? என்றால், நிலத்தை வாங்கிய சேகர் மற்றும்

விற்றவர் ஆகியோர்கள் இருந்தோம். சொத்து விபரங்களை யார் கூறினார் என்றால், சேகர் கூறினார். மேற்படி அனைத்தும் எங்கு நடந்தது என்றால், திருச்செங்கோட்டில் நடந்தது. அதற்கு பின்னர் மேற்படி பத்திரத்தில் வேறு யார், யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை.

6. சேகர் எந்த பத்திரம் வாங்கினாலும் வெங்கடேசன் என்பவரிடம் தான் தயார் செய்வார் என்ற விபரம் எனக்கு தெரியுமா? என்றால், தெரியாது. சேகரின் மனைவி ராணியும், அசோக்குமார் என்பவரும் அதே வெங்கடேசிடம் கிரைய ஒப்பந்த பத்திரம் தயார் செய்து பதிவு செய்துள்ள விபரத்தை வெங்கடேசன் சேகரிடம் கூறினாரா? என்றால், அது எனக்கு எப்படி தெரியும். ரூ.4,75,000/- பணம் கொடுத்ததை நான் பார்த்தேனா என்றால், பார்த்தேன். இந்த ஆவணத்தை தவிர்த்து வேறு ஏதாவது ஆவணத்தை சேகரும், ராணியும் ஏற்படுத்தி கொண்டார்களா? என்றால், அது எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்த பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். சேகர் என்னுடைய பங்காளி என்றால், சரிதான். நான் சாட்சியம் அளிப்பது போன்று சொன்ன தேதியில் கிரைய ஒப்பந்த பத்திரம் தயார் செய்யப்படவில்லை என்றாலும், நான் சேகருடைய நண்பர் என்பதால் சேகருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரமானது வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும், மேற்படி ஆவணத்தின் மூலம் சேகருக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை**:- இல்லை.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2026.07.22 18:05:07 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.